## SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA

### இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - SUSL

**கொள்கைத் தலைப்பு: பல்கலைக்கழகப் பணியாளர்களின் குறைதீர் கொள்கை - இ.ச.ப**

கொள்கை இலக்கம்

மூதவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட திகதி

ஆலோசனை சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட திகதி

செல்லுபடியாகும் திகதி

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட திகதிகள்

அங்கீகாரமளிக்கும் அதிகாரம்: ஆலோசனை சபை, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

நிர்வாகப் பொறுப்பு - துணைவேந்தர்

**நோக்கம்:**

இந்தக் கொள்கையின் நோக்கம், பல்கலைக்கழகத்தின் மூலோபாய இலக்குகளை நிறைவேற்றுவதற்கான அதிகபட்ச தனிப்பட்ட பங்களிப்பை உறுதி செய்யும் திருப்தியான மனித மூலதனத்தைப் பேணுவதற்காக, உத்தியோக உறுப்பினர்களின் (தனிநபர் அல்லது கூட்டு) குறைகளை ஏற்றுத் தீர்க்கும் அதேவேளை தொழில்பெறுனர்கள் தங்களின் குரலை உயர்த்தி நியாயமான விசாரணையைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுமாகும்.

**வாய்ப்பு:**

இந்தக் கொள்கையானது பல்கலைக்கழகத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் அவர்கள் நிரந்தரமாக இருந்தாலும் அல்லது நிரந்தரமற்றவர்களாக இருந்தாலும் அல்லது வெளியிலிருந்து பெறப்பட்டிருந்தாலும் அவர்களுக்கும் பொருந்தும். குறை தீர்க்கும் பொறுப்பு அனைத்து உடனடி உயர் அதிகாரிகளுக்கும், துறைகள் / மையங்கள் / அலகுகள் அல்லது பிரிவுகளின் தலைவர்கள் / பணிப்பாளர்கள், பீடாதிபதிகள், நூலகர், நிதியாளர், பதிவாளர் மற்றும் துணைவேந்தர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகம் சேவையை வெளியிலிருந்து பெற நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றில் ஈடுபடும், பல்கலைக்கழகத்தின் நேரடிப்பணியாளர் ஒருவர் குறையில் தொடர்பு பட்டால் மட்டுமே நிறுவனத்திற்குள் உள்ள அனைத்து உள் குறைகளையும் இந்தக் கொள்கையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் கையாள வேண்டும் என்று குறிப்பிட்டு கூறுகின்றது,

**சட்டவாக்க சூழல்:**

இந்தக் கொள்கையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக்கோவை மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மற்றும்

உயர்கல்வி நிறுவனங்கள் சட்டம் ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது. தேவைப்படும்போது அரசின் தாபன விதிக்கோவை பயன்படுத்தலாம். மேலும், இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், உள்ளக (பல்கலைக்கழகம்) சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கை கடிதங்கள் போன்ற துணை ஆதாரங்களால் வலுவடைகின்றது.

**வரைவிலக்கணங்கள்**

a. பல்கலைக்கழகம்: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் (SUSL)

b. பணியாளர்கள்: பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தரமான, நிரந்தரமற்ற, புறப் பணியாளர்கள் அனைவரும்

c. CQA -பல்கலைக்கழகத்தின் தரக்காப்பீட்டு நிலையம்

d. CCS - பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கைகள் மையம்

e. ஆலோசனை சபை: பல்கலைக்கழக ஆலோசனை சபை

f. UGC - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

g. குறை -திருப்தியின்மை அல்லது அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும், உண்மையாகவோ அல்லது உணரப்பட்டாலோ, பல்கலைக்கழகத்துடனான வேலைவாய்ப்பு ஒப்பந்தத்திற்கு அப்பால் எழும் அல்லது பணியாளரின் நல்வாழ்வுடன் தொடர்புடைய, ஒரு பணியாளர் அல்லது பணியாளர்களின் குழுவுக்கு நியாயமற்றது அல்லது சமத்துவமற்றது என்று நினைக்கும் நம்பும் அல்லது உணரும் எந்த விடயமும்”

h. புகார்தாரர்: புகார்களைக் கொண்ட பணியாளர்கள்

i. புகார்தாரர் - தனிப்பட்ட முறையில் அல்லது மற்றொரு நபரின் சார்பாக, குறையை நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த நபர் அல்லது நபர்களின் அமைப்பாக இருக்கலாம். மேலும், புகார் அளிப்பவர் புகார்தாரராகவோ அல்லது புகார்தாரரின் பிரதிநிதியாகவோ இருக்கலாம்.

**கொள்கை அறிக்கை:**

பல்கலைக்கழகம் அதன் பணியாளர்களுக்கு அவர்களின் குறைகளை வெளிப்படுத்தவும், குறைகளை நியாயமான, ஒப்புரவும் நீதியுமான முறையில் நிவர்த்தி செய்யவும்/தீர்வு செய்யவும் உதவுகின்ற ஒரு தொழில் வழங்கும் நிறுவனமாகும். நிர்வாகம்/நிர்வாகத்திடம் குறைகளை முன்வைக்கும் பணியாளர்களின் உரிமையை தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்கிறது. பல்கலைக்கழகம் ஒவ்வொரு குறைகளையும் தீர்க்க வேண்டிய முக்கியமான விடயமாகக் கருதுகிறது. அத்துடன் குறைகளை உடனடியாகத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. பல்கலைக்கழகத்திற்கு வெளியிலிருந்து பெறப்பட்ட தொழிலாளர்களை வழங்கும் சுயாதீன ஒப்பந்ததாரர்கள் தங்கள் பணியாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென பல்கலைக்கழகம் வலியுறுத்துகிறது. குறை தீர்க்கும் பணியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட தீர்வில் ஒரு பணியாளர் அதிருப்தி அடைந்தால், பணியாளர்களின் மேல்முறையீட்டு உரிமையை பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்கிறது.

**குறைகளை அறிந்துகொள்வதற்கான பொறிமுறைகள் மற்றும் அவற்றிட்கான தீர்வு**

பணியாளர்களின் குறைகளைத் தெரிந்துகொள்ளவும், நிவர்த்தி செய்யவும் பல்கலைக்கழகம் பலவிதமான முறைகளைக் கடைப்பிடிக்கிறது.

1. கவனிப்பு, சாதாரண/முறைசாரா விவாதங்கள் மற்றும் தீர்மானம் - பணியாளர்கள் அனுபவிக்கும் சில குறைகள் நிர்வாகத்தின் கவனத்திற்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ கொண்டு வரப்படுவதில்லை என்பது பொதுவான போக்கு. எனவே, உடனடி உயரதிகாரி, பணியாளர்கள் கூறாத குறைகள் உள்ளதா என்பதைக் கண்டறிய, பணியாளர்களின் நடத்தைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த வகையான குறைகளை நிர்வகிப்பதற்கு, அனைத்து உடனடி மேற்பார்வையாளர்களும் பணியாளர்களின் நடத்தை விலகல்களைக் கவனிக்கத் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். நடத்தை விலகல்களை அவதானித்தவுடன், உடனடி மேலதிகாரி முறைசாரா முறையில் ஊழியர்களுடன் குறையைப் பற்றி விவாதித்து, முடிந்தவரை உடனடியாகத் தீர்த்துவைத்தல்.

2. இந்தக் கொள்கையானது, பணியாளர்களின் வெளிப்படுத்தப்படாத குறைகளைத் தேர்ந்தெடுக்கும் வகையில், பல்கலைக்கழக அளவிலான பணியாளர் மதிப்பீட்டு முறையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காட்டுகிறது.

3. பணியாளர்களின் நடத்தையைப் கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக உத்தியோகத்தர்களின் திறனை வளர்ப்பதன் அவசியத்தை இந்தக் கொள்கை அடையாளம் காட்டுகிறது.

4. குறை தீர்க்கும் நடைமுறை (Grievance Redressal Procedure) - ஒரு தனிநபராகவோ அல்லது பிரதிநிதித்துவ அமைப்பாகவோ (உதாரணம்: தொழிற்சங்கங்கள்) குறைகளை அனுப்பி அவற்றைத் தீர்க்கும் முறையான வழிமுறை. திறந்த கதவு முறையைத் தேர்ந்தெடுக்கும் பணியாளர்களைத் தவிர, அனைத்து முறையான குறைகளும் குறை தீர்க்கும் நடைமுறை (GRP) மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

5. திறந்த கதவு முறை - பணியாளர்கள் தங்கள் குறைகளை, உயர்மட்ட நிர்வாகத்தின் முன் நியமனத்துடன், சேவைப் படிநிலையைக் கடைப்பிடிக்காமல், உயர்மட்ட நிர்வாகத்திற்கு அனுப்பலாம்.

6. வெளியேறும் நேர்காணல்கள் - ஒரு பணியாளர் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் பட்சத்தில், வெளியேறுவதற்கான காரணங்களை அறிந்து கொள்வதற்காக ஸ்தாபனப் பிரிவு அவரை/அவளை நேர்காணல் செய்யும். இதன் மூலம் பல்கலைக்கழகத்திற்குள் சாத்தியமான குறைகளுக்கான காரணங்கள் கண்டறியப்பட முடியும்.

7. காலநிலை ஆய்வு - சாத்தியமான குறைகளைக் கண்டறிந்து, பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் பணிபுரியும் பணிச் சூழலை உருவாக்கும் நோக்கில் ஆண்டுதோறும் ஒரு காலநிலை ஆய்வு/பணியாளர் திருப்திக் கணக்கெடுப்பு நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. குறை தீர்க்கும் குழு- ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் குறை தீர்க்கும் நடைமுறை (GRP) மூலம் அனுப்பப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் நியமிக்கப்படும் குழு.

9. குறைகேட்பு மேல்முறையீட்டுக் குழு - குறைகளைக் கேட்டுத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் நியமிக்கப்படும் குழு.

10. உண்மையான குறைகளைப் புகாரளிக்க இயங்கலை அமைப்பின் வளர்ச்சியின் அவசியத்தையும் இந்தக் கொள்கை அடையாளம் காட்டுகிறது, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இரகசியமாகப் பெறப்பட்டு அதே செயல்பாட்டு நடைமுறையின் மூலம் கையாளப்பட வேண்டும்.

**நடைமுறைபடுத்தல்**

தயவுசெய்து SOP No: CQA/SOP/Gov Mgmt/2021/01 ஐ உசாவவும்

**துணை ஆவணங்கள்**

1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டம் எண். 16

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் நிறுவன குறியீடு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உள்ளக (பல்கலைக்கழகம்) நிர்வாக மற்றும் நிதி சுற்றறிக்கைகள்

மனித உரிமை நடைமுறைக் குறியீடு

புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான தொழில் வளர்ச்சிக்கான கொள்கை - இ.ச.ப (SUSL) 256 ஆவது மூதவையில் அங்கீகரிக்கப்பட்டது.

மனித வள மேலாண்மை கொள்கை - இ.ச.ப (SUSL), 28.06.2021 இல் நடைபெற்ற 252ஆவது மூதவை மற்றும் 272 ஆலோசனைச் சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

சமத்துவம் மற்றும் பாகுபாடு இல்லாத கொள்கை - இ.ச.ப (SUSL), 30.10.2021 இல் நடைபெற்ற 253ஆவது மூதவை மற்றும் 276ஆவது ஆலோசனைச் சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

பாலின சமனிலை மற்றும் சமத்துவத்திற்கான கொள்கை - இ.ச.ப (SUSL)

பணியாளர் மேம்பாட்டு நிலையம் (SDC), தொழில் மேம்பாடு, மனித வள மேம்பாடு போன்றவற்றுடன் தொடர்புடைய ஆலோசனைக் கொள்கை ஆவணங்கள் மற்றும் பிற.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக (SUSL) த்துக்கான குறைகள் மேல்முறையீட்டுக் கொள்கை, 26.10.2020 இல் நடைபெற்ற 243ஆவது மூதவைக் கூட்டத்திலும் 264ஆவது ஆலோசனை சபை கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டது

**பிரகடனம்:**

(i) இந்தக் கொள்கையானது பல்கலைக்கழகத்தின் ஊழியர்களிடையே ஒரு ஆவணமாகப் பரப்பப்படும் மற்றும் புதிய பணியாளர்கள் கொள்கை மற்றும் நிலையான இயக்க முறைமை (SOP) குறித்து உள்வரும் அல்லது அறிமுக (Induction) செயல்பாட்டில் கற்பிக்கப்படுவார்கள்.

(ii) பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

(iii) பல்கலைக்கழகத்தின் ஸ்தாபனப் பிரிவில் கிடைக்கும்

இந்தக் கொள்கையானது, இ.ச.ப (SUSL) (32ஆவது SSC-QA கூட்டம், ஆகஸ்ட் 2021 இல் நடைபெற்ற) பல்கலைக்கழகத்தின் தரக்காப்பீட்டு நிலையத்தின் பொருட்டு, மூதவை குழு பரிந்துரைத்த குழுவால் தயாரிக்கப்பட்டது. 14.09.2021 இல் நடைபெற்ற அதன் 255ஆவது கூட்டத்தில் இக்குழுவிற்கு மூதவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

*குழு அமைப்பு*

*கலாநிதி. எம். சந்துன் ஜே. பெரேரா (தலைவர்)*
*பேராசிரியர் எச்.ஏ.டி. ருவன்தீபிகா (உறுப்பினர்)*
*திருமதி. பி. கயானி இமந்திகா டயஸ் (செயலாளர்)*
*கலாநிதி. எச்.பி. ரசிக பிரியங்கர (உறுப்பினர்)*
*திரு. சமன் உயங்கொட (உறுப்பினர்)*

***** குறிப்புகள்: அக்டோபர் 21, 2021 இல் நடைபெற்ற 34ஆவது மூதவை நிலைக்குழு கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் இந்த திருத்தப்பட்ட கொள்கை ஆவணம் தயாரிக்கப்பட்டது.***